# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
***********

முறையீட்டு மனு எண்: 435/2016/பே

ஆணை எண்: 191/2017

நாள்: 25/07/2017

திரு. ஏ. நாகராஜன்,
மருவூர்க் கோணம்,
மூலச்சல், தக்கலை,
கன்னியாகுமரி மாவட்டம்.

திரு. கே.ரசல்ராஜ், B.A
ஓரப்பனவிளை,
மூலச்சல், தக்கலை,
கன்னியாகுமரி மாவட்டம். — முறையீட்டு மனுதாரர்கள்

செயல் அலுவலர்,
விலவூர் பேரூராட்சி,
(இரு) தக்கலை,
கன்னியாகுமரி மாவட்டம். — எதிர் மனுதாரர்

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், மருவூர் கோணம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஏ. நாகராஜன், மற்றும் ஓரப்பனவிளை கிராமத்தைச் சேர்ந்த திரு. கே. ரசல்ராஜ் என்பவர்களது முறையீட்டு மனுக்கள் பேரூராட்சிகளின் இயக்குனர் சென்னை அவர்கள் மூலம் இம்முறை மன்ற நடுவத்தில் 10.05.2016ல் பெறப்பட்டு 435/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர்களின் முறையீட்டு மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு. ஏ. நாகராஜன், மருலூர் கோணம் அவர்கள் தனது முறையீட்டு மனுவில், தக்கலை அடுத்து விலவூர் பேரூராட்சி உள்ளதாகவும் இந்த பேரூராட்சியில் பல லட்சக்கணக்கில் ஊழல் நடந்துள்ளதாகவும் வேலை செய்யாமல் பில், ஒரு தடவை போட்ட காங்கிரீட் மேல் அடுத்து பில் என புகார் தெரிவித்துள்ளார். இதற்கு மூலக் காரணம் செம்பகவல்லி E.O பணியினை சரிவர செய்வதில்லை எனவும், தலைவருக்கு 5 விழுக்காடு துணை தலைவருக்கு 3 விழுக்காடு வார்டு உறுப்பினர்களுக்கு 2 விழுக்காடு என்று நிர்ணயம் செய்துள்ளதாகவும் இதற்கு உடந்தையாக ஒப்பந்தக்காரர்கள். கடந்த. ஆட்சியில் பல கோடி ரூபாய்க்கு வளர்ச்சிப் பணிகள் நடந்துள்ளதாகவும் எந்த பணியும் சரிவர செய்வதில்லை எனவும் தெரிவித்துள்ளனர். மேலும் கையூட்டு வழங்கும் ஒப்பந்ததார்களுக்கு எல்லா வேலைகளும் வழங்கப்படுவதாகவும் தற்போது 2010ம் ஆண்டில் தலைவரும் E.O.வும் சேர்ந்து பைப்பு லீக் ஒட்டியதாக பல லட்சம் ரூபாய் ஊழல், அரசுக்கு பல கோடிக்கணக்கில் இழப்பீடு செய்த தலைவர் மற்றும், E.O. விடம் இருந்து பணத்தை திரும்ப அரசுக்கு கட்டவேண்டும் எனவும் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார். இதனை தொடர்ந்து திரு. கே. ரசல்ராஜ், பி.ஏ. அவர்கள் தனது முறையீட்டு மனுவில் கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அடுத்து விலவூர் பேரூராட்சியில், தமிழ்நாடு அரசு நபார்டு வங்கி மூலம் பல பணியினை தேர்வு செய்ததாகவும் அதில் விலவூர் பேரூராட்சியில் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் அமைத்த தார்ச்சாலையில் மீண்டும் ரூ.27.00 லட்சத்தில் நபார்டு வங்கி உதவி திட்டத்தின் மூலம் திரும்பவும் தார்ச்சாலை அமைக்க மதிப்பீடு தயார் செய்து இந்த மாதம் 28 ம் தேதி டெண்டர் விடுவதாக மக்கள் பேசுகிறார்கள் எனவும் அரசுக்கு இழப்பீடு செய்ய தலைவர், E.O. மற்றும் துணை இயக்குனர் ஆகியோர் உடந்தையாக உள்ளனர் எனவும் புகார் அளித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் திரு. ஏ. நாகராஜன் அவர்களுக்கு, முறையீட்டு மனுவினை உரிய முறையில் ரூ.10/-க்கான நீதிமன்ற வில்லை ஒட்டி அனுப்பி வைக்குமாறு இம்முறைமன்ற நடுவ அமைப்பு கடித எண்.435/2016/பே/நாள்:24.05.2016ல் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், மேற்படி கடிதம் அஞ்சல் துறையினரால் 04.06.2016 வரை முகவரியில் முகவரிதாரர் இல்லை என தெரிவித்து மீண்டும் இம்முறைமன்ற நடுவத்தால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் திரும்ப பெறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் திரு. ஏ. நாகராஜன் அவர்களின் முறையீட்டு மனு சம்பந்தமான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி விலவூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ அமைப்பு அறிவிப்பாணை

எண்.435/2016/பே/நாள்:2406.2016, 02.09.2016 மற்றும் 22.11.2016 ஆகிய தேதிகளில் அனுப்பி வைக்கப்பட்டது.

செயல் அலுவலர், விலவூர் அவர்கள் தனது கடித எண்.245/2016/அ1/நாள்:30.11.2016 ன் மூலம் முறையீட்டு மனுதாரர் திரு. ஏ. நாகராஜன் அவர்களின் முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"...விலவூர் பேரூராட்சியில் 2009 – 2010 மற்று 2011 ம் ஆண்டுகளில் மன்ற தீர்மானத்தின்படி சாலை மேம்பாடு பணிகள், வடிகால் சீரமைக்கும் பணி, குடிநீர் திட்டப் பணிகள் தேர்வு செய்யப்பட்டு பேரூராட்சி செயற்பொறியாளர் மதிப்பீடு பெறப்பட்டு மதிப்பீடு மன்ற அங்கீகாரத்துடன் தொழில் நுட்ப அனுமதி பெற்ற பின் மேற்காணும் பணிகள் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்ட பின்னர் குறைந்த இலக்கு ஒப்பந்தபுள்ளி கோரும் ஒப்பந்தக்காரருக்கு மன்ற அங்கீகாரத்துடன் பணிகள் செய்ய வேலை உத்திரவு வழங்கப்படுவதாகவும், பணிகள் முடிவுற்றதும் தொழில் நுட்ப உதவியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் மூலம் அளவுகள் எடுத்து செயற்பொறியாளரின் அனுமதி மற்றும் தொகை வழங்க அனுமதி பெற்ற பின்னர் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு தொகை காசோலை மூலம் வழங்கப்படுவதாகவும், புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளபடி பேரூராட்சியில் நிதி இழப்பு ஏற்பட வாய்ப்பு ஏதுமில்லை எனவும் மனுதாரர் திரு. ஏ. நாகராஜன் மருவூர் கோணம் என்பவர் புகாரில் குறிப்பிட்டது யாவும் உண்மைக்கு புறம்பானது எனவும் மேலும் மேற்படி மனுதாரர் அவர் அளித்துள்ள முகவரியில் வசிக்கவில்லை ..." எனவும் தனது விளக்க கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் திரு. கே. ரசல்ராஜ் அவர்களின் முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை கோரி செயல் அலுவலர், விலவூர் அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவ அமைப்பு கடித எண்.435/2016/பே/நாள்: 05.12.2016, 24.01.2017, ஆகிய அறிவிப்பாணைகள் மூலம் கோரப்பட்டதில் செயல் அலுவலர், விலவூர் தனது கடித எண். 270/2016/அ1/நாள்:06.02.2017ன் மூலம் தனது விளக்க அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"...விலவூர் பேரூராட்சியில் 2012–13ம் வருடம் அரசாணை எண்.218/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:23.08.2012ன்படி மூலச்சல் ஆர்.சி.சர்ச் முதல் தாந்தவிளை

மற்றும் பிலாங்காலை தேவர்குளம் சாலை கருந்தளம் அமைத்தல் மற்றும் மேம்பாடு செய்தல் பணிக்கு ரூ.27.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி பணி செய்து முடிக்கப்பட்டு தற்போது இச்சாலை பொதுமக்களின் பயன்பாட்டில் நல்ல முறையில் உள்ளதாகவும் இந்த சாலையில் தற்போது வேறு திட்டப் பணிகள் செய்ய பேரூராட்சியால் தீர்மானிக்கவோ, மதிப்பீடு தயாரிக்கவோ, உத்தேசிக்கவே இல்லை என்ற விவரத்தினை தனது விளக்க அறிக்கை மூலம் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர்கள் திரு. ஏ. நாகராஜன், மருவூர்கோணம் மற்றும் திரு. கே. ரசல்ராஜ், ஓரப்பனவிளை ஆகியோர்களின் நேரடி வாக்குமூலத்தினை பெறவேண்டி இரு முறையீட்டு மனுதாரர்களுக்கும் இம்முறை மன்ற நடுவ விசாரணைக்கு 09.03.2017 பிற்பகல் 3.00 மணியளவில் ஆஜராகுமாறு தெரிவித்து இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண்.435/2016/பே/நாள்:24.01.2017 அனுப்பப்பட்டது. திரு. ஏ. நாகராஜன் அவர்களுக்கு அனுப்பிய அறிவிப்பாணை அஞ்சலகத் துறையினரால் 03.02.2017 வரை முகவரியில் இல்லை என்ற விவரத்தினை பதிந்தும், திரு. கே. ரசல்ராஜ் அவர்களுக்கு அனுப்பிய அறிவிப்பாணை அஞ்சல் துறையினரால் 07.02.2017 வரை முகவரியில் இல்லை என்ற விவரத்தினை பதிந்தும் மீண்டும் இம்முறைமன்ற நடுவத்திற்கு அஞ்சல் துறையினரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர்களின் மனுக்கள், செயல் அலுவலர், விலவூர் அவர்களின் விளக்க அறிக்கை மற்றும் முறையீட்டு மனுதாரர்களின் நேரடி கருத்தினை அறிய அனுப்பப்பட்ட அறிவிப்பாணைகள் முகவரியில் சம்பந்தப்பட்டவர்கள் இல்லை என திரும்ப வரப்பெற்றதையும் கருத்தில் கொண்டு புகார் மனுதாரர்கள் சரியான முகவரியுடன் தங்களது முறையீட்டு மனுக்களை அனுப்பி வைக்கவில்லை என்பது புலனாகிறது. மேலும் இரு முறையீட்டு மனுதாரர்களின் முறையீட்டு மனுக்களுக்கு விலவூர் பேரூராட்சி செயல் அலுவலர் அனுப்பியுள்ள அறிக்கை பரிசீலிக்கப்பட்டு ஏற்கப்பட்டது. முறையீட்டு மனுதாரர்களுக்கு கூடுதல் வாய்ப்பளித்து நேரடி கருத்தினை எடுத்துரைக்கும் வகையில் அனுப்பப்பட்ட அழைப்பாணைகள் இரண்டும் சரியான முகவரியில் இல்லை என அஞ்சல் துறையினரால் மீண்டும் இம்முறைமன்ற நடுவத்திற்கே திரும்ப வரப்பெற்றுள்ளது. மனுதாரர்களுக்கு உரிய வாய்ப்புகள் அளித்தும் விசாரணைக்கு ஆஜராகவில்லை. மேலும்,

எவ்வித ஆதாரமும் சமர்ப்பிக்கவில்லை. இந்நிலையில் செயல் அலுவலரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு ஏற்று இவ்விரு முறையீட்டு மனுக்களையும் தள்ளுபடி செய்து இம்முறைமன்ற நடுவத்தால் ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு ஜுலை திங்கள் 25ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//---
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்
திரு. ஏ. நாகராஜன்,
மருவூர்கோணம்,
மூலச்சல், தக்கலை,
கன்னியாகுமரி மாவட்டம்

திரு. கே. ரசல்ராஜ்,
ஒரப்பனவிளை,
மூலச்சல், தக்கலை,
கன்னியாகுமரி மாவட்டம்

செயல் அலுவலர், விலவூர் பேரூராட்சி